12 OCT 2015

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III Examination in Bachelor of Administration - 2010/2011 (October 2015)

## (Proper/Repeat)

## EXB 401(b) – Taxation

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க** **நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**வினா 01**

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையிலுள்ள "தபோவனம் பல்பொருள் அங்காடி" சிவாவுக்கு உரித்தானதாகும். சிவா இவ்வியாபாரத்தை 1984ம் ஆண்டு ஆரம்பித்துள்ளார். 31.03.2014 ல் முடிவடைந்த வரிமதிப்பாண்டிற்கான அவரது தேறிய இலாபம் ரூ. 3,750,000/= ஆகும்.

குறிப்புகள்

1. தேறிய இலாபம் பின்வரும் வருமானம்/இலாபங்களையும் உள்ளடக்கியுள்ளது.
   - அ. வான் விற்பனை இலாபம் - 150,000/=
   - ஆ. களஞ்சியசாலை மூலம் மொத்த வாடகை - 400,000/=
   - இ. தனது 15 வயது மகனுக்கு தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்புக் கணக்கு மூலமான மொத்த வட்டி - 150,000/=
   - ஈ. விவசாய வருமானம் (நெல் சாகுபடி) தேறியது 500,000/=
   - உ. தேறிய பங்கு இலாபம் - ரூபா. 450,000/=

2. காணி கட்டிட ஆரம்ப மீதி 01.04.2013 அன்று ரூ. 1,950,000/=. இவை 1984 ல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். வ/ஆ 2013/2014 காலப்பகுதியுள் புதிதாக ஒரு கட்டிடத்தை கட்டி களஞ்சிய பாவனைக்காக வாடகைக்கு கொடுத்துள்ளார். புதிய கட்டிடத்தின் பெறுமதி ரூ. 1,000,000/=

   வ/ஆ 2013/2014 காலத்துள் பெற்ற மொத்த வாடகை ரூ. 400,000/=

3. மோட்டார் வாகனங்களின் ஆரம்ப மீதி (01.04.2013 அன்று) ரூ - 2,000,000/=. இது வ/ஆ 2011/2012ல் ரூ-1,000,000/= க்கு கொள்வனவு செய்யப்பட்ட லொறி ஒன்றையும், வினியோகத் தேவைக்காக வ/ஆ 1989/1990ல் ரூ-600,000/= க்கு கொள்வனவு செய்யப்பட்ட வேன் ஒன்றையும், இவைக்கு மேலதிகமாக கார் ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது.

   மேற்குறிப்பிட்ட வினியோக வேன் 30.03.2014 அன்று விற்பனை செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 31.03.2014 அன்று ரூ-1,000,000/= க்கு பிறிதொரு புதிய வேன் கொள்வனவு செய்யப்பட்டு அன்றே வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

   விற்பனை செய்யப்பட்ட வேனுக்குரிய மொத்த பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூ. - 250,000/= ஆகும்.

4. 01.04.2013 அன்று உள்ள தளபாட ஆரம்ப மீதியானது வ/ஆ–2010/2011ல் ரூ 100,000/= க்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களையும் உள்ளடக்கியுள்ளது.

வ/ஆ 2013/2014னுள் ரூ 50,000/= பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகிறது.

5. வ/ஆ 2013/2014 காலப்பபகுதியுள் ரூ.-200,000/= பெறுமதியான புதிய கணனி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகும்.

6. கணக்குப் புத்தகங்களின் படியான இவ் வரிமதிபாண்டுக்குரிய பெறுமானத்தேய்வு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் | - | 65,000 |
| மோட்டார் வாகனங்கள் | - | 350,000 |
| தளபாடங்கள் | - | 45,000 |
| கணனி | - | 48,000 |
| மொத்தம் | - | 508,000 |

7. திரு சிவா கன்ரர் ரக வாகனமொற்றை வியாபாரத் தேவைக்காக மூன்று வருட குத்தகை வாடகை அடிப்படையில் த.பினான்ஸ் நிறுவனத்திடமிருந்து 01.10.2013 அன்று பெற்று வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ளார்.

இதன் மாதாந்த குத்தகை வாடகை ரூ. 25000/=கும்.
வ/ஆ – 2013/2014க்கு செலுத்தப்பட்டுள்ள மொத்த குத்தகை வாடகை ரூ.-250,000/=கும்.

8. இவ் வ/ஆண்டு ரூ. 120,000/= ஆனது கட்டிடத்திற்குரிய சோலைவரியாகவும், திருத்தச் செலவாகவும் செலுத்தியுள்ளார். எவ்வாறாயினும் இதில் 15%னது வாடகைக்கு விடப்பட்ட கட்டிடத்துக்குரியதாகும்.

9. அறவிடமுடியாக்கடன் ஒதுக்கக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க.பட்டோர் க/கு மீ/கீ/செ | | 10,000 | மீ/கீ/வ | 110,000 | |
| பொது ஒதுக்கம் | 155,000 | | விசேட ஒதுக்கம் | 70,000 | 180,000 |
| விசேட ஒதுக்கம் | 85,000 | 240,000 | காசு ஒதுக்கு | | 30,000 |
| | | | இ.ந.க/கு | | 40,000 |
| | | 250,000 | | | 250,000 |

(அ). விசேட ஒதுக்க விபரம்

| **ஆரம்ப மீதி** | **ரூபா** | **இறுதி மீதி** | **ரூபா** |
|---|---|---|---|
| கமால் | 50,000 | கமால் | - |
| நிமால் | 20,000 | நிமால் | 20,000 |
| | 70,000 | பாபு | 40,000 |
| | | குமார் | 25,000 |
| | | | 85,000 |

(ஆ). இவ்வாண்டுக்குரிய அ.மு.க. ஒதுக்கம் ரூ. – 40,000/=

(இ). ரூ.-30,000/= னது முந்திய வரிமதிப்பாண்டில் பதிவழிக்கப்பட்ட ஒரு தொகையை பிரதி பலிக்கின்றது. இவ்வாண்டு திரு.சஞ்சனிடமிருந்து அறவிடவேண்டிய ரூ.-10,000/= பதிவழிக்கப்பட்டது.

10. மோட்டார் வாகன திருத்தச் செலவான ரூ.-150,000/= சிவாவினுடைய காரின் திருத்தச் செலவான ரூ.-25,000/= யும் உள்ளடக்கியுள்ளது.

11. மின் மற்றும் தொலைபேசிக் கட்டணம் ரூ.148,000/= இதில் 20% னது சிவாவின் தனிப்பட்ட வதிவிடத்திற்குரியதாகும்.

12. காப்பறுதிக்கட்டணம் மொத்தம் ரூ.700,000/=.

| | |
|---|---|
| திரு. சிவாவின் ஆயட்காப்புறுதிப் பூட்கைக்குரியது | 400,000.00 |
| தபோவனம் பல்பொருள் அங்காடிக்குரிய தீ மற்றும் வெள்ள அபாய காப்புறுதி - | 150,000.00 |
| தனது இல்லத்திற்குரிய தீ மற்றும் வெள்ள அபாய காப்புறுதி | 150,000.00 |
| | 700,000.00 |

13. இவ் வ/ஆ க்குரிய மொத்தப் புரள்வு ரூ. – 107,500,000
செலுத்தப்பட்டுள்ள தே.க.வ. (NBT) ரூ. – 1,480,000

14. வ/ஆ-2011/2012 ல் இவர் தனது வியாபாரமூலம் ரூ.850,000/- இனை தேறிய நட்டமாக எதிர்கொள்ள நேரிட்டது. எவ்வாறாயினும் வ/ஆ 2012/2013லிருந்து ரூ-195,000/-இனை ஈடுசெய்யப்படாத நட்டமாக இவ் வ/ஆ க்கு முன் கொண்டுவரப்பட்டுள்ளது.

15. திரு.சிவாவின் பல் பொருள் அங்காடிக்குரிய வ/ஆ-2013/2014 க்கான வி.இ.ந.க/கு பின்வரும் செலவுகளையும் கொண்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| விளம்பரம் | 400,000 |
| ஆண்டு இறுதியில் அறுகம்பைக்கான உல்லாசப்பயண செலவு | 50,000 |
| வருமான வரி செலுத்தியது (வ/ஆ-2013/2014க்கு) | 95,000 |
| புகைப்பட பிரதியெடுத்தல் இயந்திரக் கொள்வனவு | 400,000 |

16. இவ் வ/ஆ னுள் திரு.சிவாவினால் மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புத்தொகை ரூ.800,000/- பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.

| | ரூபா |
|---|---|
| செங்கலடி வைத்திய சாலைக்கு சக்கர நாற்காலிகள் | 400,000 |
| வந்தாறு மூலை சுப்பர்ஸ்டார் விளையாட்டுக்கழகத்துக்கு பணமாக | 50,000 |
| அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமான விபுலானந்த முதியோர் இல்லத்திற்கு மலசல கூடம் அமைத்துக்கொடுத்தது | 350,000 |
| | 800,000 |

17. திரு.சிவாவின் முன்னய மனைவிக்கு செலுத்திய தாபரிப்புப் பணம் (Annuity) ரூ.200,000/-.

குறிப்பு:

இலாப நட்டக் கணக்கிலுள்ள ஏனைய அனைத்து செலவுகளும் வரித்தேவைக்காக அனுமதிக்கத்தக்க செலவுகள் எனக்கொள்க. நீங்கள் பின்வருவனவற்றை காணுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

1. "தபோவனம் பல்பொருள் அங்காடியின்" சீர் செய்யப்பட்ட வியாபார இலாபம் **(40 புள்ளிகள்)**
2. திரு.சிவாவின் மொத்த நியதிச்சட்ட வருமானம் **(05 புள்ளிகள்)**
3. திரு.சிவாவின் மொத்த வருமதி வருமானம் **(05 புள்ளிகள்)**
4. திரு.சிவாவின் மொத்த வரிவிதி வருமானம் **(05 புள்ளிகள்)**
5. வ/ஆ-2013/2014 க்கு திரு.சிவா செலுத்த வேண்டிய மீதி வரி **(05 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 60)**

**வினா 02**

அரசாங்க வைத்திய சேவையில் நிபுணராயிருந்த திரு.லோகேஸ்வரன் ஓய்வு பெற்ற பின்பு "ஆரோக்கியா" எனும் வைத்திய நிலையத்தை கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் சொந்தமாக நடாத்தி வருகிறார் அத்தோடு வேறு தனியார் வைத்தியசாலைகளிலும் நிபுணத்துவ சேவையை வழங்கி வருகிறார்

வ/ஆ 2013/2014 க்குரிய இவரது இலாபங்களும் வருமானங்களும் பின்வருமாறு இருந்தது.

| | ரூபா |
|---|---|
| ஓய்வூதிய பெறுகை | 780,000 |
| நிபுணத்துவ சேவை வருமானம் | 900,000 |
| ஆரோக்கியா வைத்திய நிலையத்தின் சீராக்கப்பட்ட இலாபம் | 1,200,000 |
| விவசாய வருமானம் (சீராக்கப்பட்டது) | 100,000 |
| | 2,980,000 |

இவர் வ/ஆ 2013/2014 க்குரிய சரியான வரியினை செலுத்தி திரட்டு படிவத்தினையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை மற்றும் அதனோடிணைந்த ஆவணங்களையும் கடந்த 27.11.2014 அன்று இறைவரிப் பணிமனையில் முறைப்படி சமர்ப்பித்துவிட்டார்.

எவ்வாறாயினும் 2006ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 163(3) க்கு அமைவாக ஒரு கடிதத்துடன் (Letter of intimation) வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றையும் பெற்றுள்ளார்.

மேற்படி கடிதத்தில் "………….. வாடகை வருமானம் வெளிப்படுத்தப்படாமையால் உமது திரட்டு படிவம் நிராகரிக்கப்பட்டு வரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது………." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர் வைத்தியர் லோகேஸ்வரனிடம் சிகிச்சை பெறும் ஒருவராவீர். அத்தோடு கிழக்கு பல்கலைக் கழகத்தில் வணிகத்துறையில் ஓர் இறுதியாண்டு மாணவர் என்பதும் அவருக்கு தெரியும். இதன் காரணமாக உம்மிடம் அவர் கூறுவதாவது "எனது பெயரில் கட்டிடங்கள் எதுவுமில்லை ஆயினும் எனது மனைவி திருமதி லில்லி லோகேஸ்வரனுக்கு அவரது பெற்றோரால் அன்பளிப்பு செய்யப்பட்ட ஒரு கட்டிடம் செங்கலடியிலுண்டு என்றும் அதனை மனைவி மக்கள் வங்கிக்கு வாடகைக்கு கொடுத்ததன் பேரில் கிடைக்கும் வாடகையை அவவே அனுபவிக்கிறார்……." என்றும் கூறி, இக் காரணங்களினடிப்படையில் "மேன்முறையீடு"(Appeal) செய்ய முடியுமா? என்று உம்மிடம் கேட்கிறார்.

**வினா:**

வலிதான மேன்முறையீடு தொடர்பில் நீர் எவ்வாறு இவருக்கு ஆலோசனை கூறுவீர்.

**(25 புள்ளிகள்)**

**வினா 03**

சிறுகுறிப்பு தருக

1. "சுயமதிப்பீட்டு அடிப்படையில்" வரி செலுத்துதல் என்றால் என்ன? வரி செலுத்துனர் - வரி அறவிடுபவர் ஆகிய இரு சாராருக்கும் அதனாலாய நன்மைகளும்.

   **(05 புள்ளிகள்)**

2. பெறுமதி சேர் வரி (VAT)யும், இவ்வரியை அறிமுகப் படுத்தியதால் வரியமைப்பில் ஏற்பட்ட முக்கிய சீராக்கமும்.

   **(05 புள்ளிகள்)**

3. தகமைக் கொடுப்பனவுகள்.

   **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**